# தருமபுரம் ஞானாம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரி.
## மயிலாடுதுறை

மயிலாடுதுறை, தருமபுரம் ஞானம்பிகை அரசினர் மகளிர் கலைக்கல்லூரியில் உலக மகளிர்தின விழா மற்றும் சேவைக் குழுக்களின் நிறைவு விழா கொண்டாடப்பட்டது . இதில் வேதியியல் துறைத்தலைவர் மற்றும் பேரவைப் பொறுப்பாசிரியர் இரா சுபா வரவேற்புரை வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் த.அறவாழி தலைமையுரை வழங்கினார். இந்நிகழ்வில் சீர்காழி, பொன்மனச்செம்மல் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் M. சாந்தி மற்றும் ஆடுதுறை,மாவட்ட கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம், முதுநிலை விரிவுரையாளர் (ஓய்வு),நல்லாசிரியர் திரு.G. திருநாவுக்கரசு சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டனர். மேலும் பல்வேறு சேவைக்குழுக்களின் பொறுப்பாசிரியர்களான முனைவர் S.சுமதி ,திருமதி D.சிவயோகம் ,திருமதி V. வசந்தி, திருமதி.R. சீதாலட்சுமி ,முனைவர். R.இளவரசி ,முனைவர்.A. மலர்விழி ,முனைவர். B.தீபா மற்றும் முனைவர் .மு .ராஜேஷ் ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டு தங்கள் ஆண்டறிக்கைகளை வாசித்தனர்.மேலும் இதில் NSS,SSL,YRC, EXNORA,LEO போன்ற சேவைக் குழுக்களைச் சேர்ந்த மாணவிகளுக்கு சான்றிதழ்கள் மற்றும் விருதுகள் வழங்கி சிறப்பித்தனர்.

உலக மகளிர் தின விழாவை முன்னிட்டு மகளிரைப்போற்றும் வகையில் கல்லூரி மாணவிகளில் சிறந்த மாணவிகளைத் தேர்வு செய்து , இவ்வாண்டின் சிறந்த மகளிருக்கான விருது ஆங்கிலத்துறை மாணவி செல்வி.S அபிநயா, மற்றும் பொருளியல் துறை மாணவி செல்வி. A. ரஞ்சனி ஆகிய மாணவிகளுக்கு வழங்கி சிறப்பிக்கப்பட்டது. இறுதியாக நாட்டு நலப்பணித்திட்ட அலுவலர் திருமதி V.வசந்தி அவர்கள் நன்றி கூறினார்.